

# Sri Sri Karai Siddhar School of Mental Callisthenic



## மஹான் ஸ்ரீ காரைச் சித்தர் வாழ்க்கை வரலாறு

– ஸ்ரீமதி எஸ். அம்புஜம்மாள்

பழம்பெரும் நாடான நம்முடைய பாரத நாடு மிகப் பெருமை வாய்ந்த நாடு. இந்நாட்டின் பெருமை தனிப்பட்டது; வேறு எங்கணும் காணாத வியப்புடையது. இங்குந்தான் மன்னர்களும் மாவீரர்களும் இருந்தனர். ஆனால் அவர்களோடு அவர்களுடைய அரண்மனைகளும், கோட்டைகளும், அரண்களும், போர்க்களங்களும் அடியோடு மறைந்து விட்டன. எனினும், அவர்கள் கட்டிய ஆலயங்கள் அழிய வில்லை. ஆண்டவனது திரு உருவங்களும், அவற்றைப் பாடிய அன்பர்களின் திருப்பாடல்களும், அவ்வாலயங்களைச் சேர்ந்த அறச் சாலைகளும், தவச்சாலைகளும், அறநெறித் தூபிகளும் இன்றும் நம் நாகரிகத்தின் ஆணிவேர்களாகத் திகழ்கின்றன.

அதாவது, நம்நாட்டுப் பண்பாடு வேந்தனையோ, வீரனையோ சிறுமை செய்யவில்லை. ஆனால் வேதாந்தியை, துறவியை, ஞானியைப் பெருமைப் படுத்துகிறது. துறவிக்கு வேந்தன் துரும்பு என்று துணிந்து கூறுவதைப் போல் உள்ளது. பாரத பூமி கர்ம பூமி மட்டும் அல்ல, தர்ம ஷேத்திரம், ஞான பூமி, தவத்தின் பிறப்பிடம், பக்தியின் இருப்பிடம், சித்திகளின் சேம நிதி, முக்திக்குக் கருவூலம், வேதங்கள், உப நிடதங்கள், தர்ஸனங்கள், இராமாயண, பாரத இதிஹாசங்கள், ஸ்மிருதிகள், தர்ம சாஸ்திரங்கள், ஆகமங்கள், தந்திரங்கள், புராணங்கள், யாவும் மேற் கூறிய உண்மைகளின் அத்தாட்சிகளே யாகும். இந் நாடு வேத ரிஷிகள் முதல் மகாத்மா காந்தி வரையில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக, அடுத்தடுத்து மகான்களுக்குத் தாயகமாய் விளங்கி வந்து இருக்கிறது.

கண்டு அனுபவிக்கும் உலகம் பெரிதுதான்; எனினும் அந்த உலகத்துக்கு ஆதாரமான காணமுடியாத கடவுளைக் காண்பதே வாழ்வின் பெரு நோக்கம். அக் கடவுட் காட்சியோடு இவ்வுலகத்தை காணும்போது இவ்வுலகமே சைதன்யமாக மாறிவிடுகிறது. "நேதி நேதி" எனக் கண்டன வெல்லாம் அல்ல என்று கண்டனை 'அஹம் ப்ரஹ் மாஸ்மி' 'சிவாஹம்' 'ஸோஹம்' 'ஸா ஹம்' என்று ஸ்வாத்மாவை ஸர்வபூதாத் மாவான ஈஸ்வர சைதன்யமாகக் கொண்டு, அத் தெய்வீகக் காட்சியிலே கண்டனவெல்லாம் மோன உரு வெளியது ஆகவும் கருதி அவன் நான், நான் அவன் என்னும் ஐக்கிய பாவத்திலே அருட்பெரும் ஜோதி வள்ளலாரைப் போலவே,

சிற்சபையும் பொற்சபையும் சொந்தமென தாச்சு
தேவர்களும் மூவர்களும் பேசுவதென் பேச்சு

இச்சமய வாழ்விலெனக் கென்னையினி ஏச்சு
என்பிறவித் துன்பமெலாம் இன்றோடே போச்சு

என்னும் மகா ஞான சித்தர்கள் இந்நாட்டில் எப்போதும், எங்கோ அங்குமிங்குமாக இருக்கத்தான் செய்கிறார்கள். அத்தகைய உத்தம ஞான சித்தர் பரம்பரையிலே வந்தவர்தான் காரைக்கோட்டை ஸ்வாமிகள் என்று அழைக்கப்பெறும் நம் காரைச் சித்தர்.







இம் மஹான் 1918–ம் ஆண்டு திருவனந்தபுரத்தில் பிறந்தார். எனினும் இவரது சொந்த ஊர் கும்பகோணத்தை அடுத்து, குடமுருட்டி ஆற்றின் கரையில் உள்ள நாகரஸம்பேட்டை என்னும் ஒரு சிற்றூராகும். அவரது தந்தை ஸ்ரீ கிருஷ்ணமாச்சாரியார் வடமொழியில் தேர்ந்த அறிவாளி. குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தாலும், பற்றற்று, அதிவர்ணாஸ்ரமியாகவே வாழ்ந்தார். மேலும் வருங்காலம் உரைத்தல் போன்ற அதிசயமான அனுக்கிரக சக்திகளையும் பெற்றிருந்தார். அவருடைய மனைவியார் ருக்மணிஅம்மாள். அவர்களுக்கு நான்கு ஆண் குழந்தைகளும், இரண்டு பெண் குழந்தைகளும் பிறந்தனர். அவர்களுள் இரண்டாவது குமாரர்தான் நமது ஸ்வாமிகள்.

இளம்பிராயத்திலே ஸ்வாமிகள் பள்ளிப் படிப்பில் இஷ்டமின்றி விளையாட்டிலும் வேடிக்கையிலும் பொழுதைக் கழித்தார். யாருக்கும் அடங்காத இளைஞனை தாய் தன்னுடைய சகோதரியான செல்லம்மாளுடைய இல்லத்திற்கு, காரைக்கோட்டை கிராமத்துக்கு அனுப்பி வைத்தார். ஸ்வாமிகளுக்கு சிற்றன்னையின் வீடே சொந்த வீடாயிற்று. அங்கு போயும் இளைஞன் திருந்தவில்லை. பள்ளிப் படிப்பு அவருக்கு வேம்பாய் இருந்தது. அந்தக் காலத்திலேயே அவருக்கு அசாதாணமான சக்திகள் இருந்தனவாம். பன்னிரண்டு வயதாகும்போது வீட்டைவிட்டு ஓடினார். வடக்கே இமயமலை வரையில் சுற்றித் திரிந்து விட்டு, மூன்று ஆண்டுகளுக்குப்பின் தெற்கே திரும்பினார். திருப்பதி மலைக் காட்டுக்குள் ஓராண்டு சுற்றினார்.

அதன் பிறகு சொந்த ஊரான நாகரசம்பேட்டைக்குத் திரும்பி, குடும்பப் பொறுப்புகளை ஏற்று நடத்தினார். ஆயினும் அவருடைய கொள்கைகளும் நடை உடை பாவணைகளும் அசாதரணமாய் இருந்தன. அவருக்கு ஜாதி, மத வித்தியாசம் இல்லை. எல்லா வகுப்பினருடன் நெருங்கிப் பழகினார். அவருக்கு குஸ்திச் சண்டையிலும், குத்துச் சண்டையிலும் அபார மோகம். எப்பொழுதும் பல வகுப்பாரான நண்பர்களுடன் சுற்றித் திரிவதும், நினைத்த இடத்தில் சாப்பிடுவதும், அவருடைய போக்கு சுற்றத்தாருக்கும், ஊரில் உள்ள முதியவர்களுக்கும் பிடிக்கவில்லை.

ஏற்கனவே அவருடைய மூத்த சகோதரர் இளம் பிராயத்திலேயே துறவு பூண்டு எங்கோ சென்று மறைந்து விட்டார். அதனால் குடும்பத்தின் மூத்த குமாரன் என்ற பெரும் பொறுப்பு ஸ்வாமிகளின் தலையில் விழுந்தது. அதனால் அன்னையின் ஆணையைச் சிரமேற்கொண்டு நம் ஸ்வாமிகள் விவாகம் செய்து கொள்ளச் சம்மதித்தார்.

அவருக்கு மனைவியாக வாய்க்கப் பெற்ற சுலோசனா என்ற அம்மையார், வள்ளுவருக்கு வாசுகி போலவும், வசிஷ்டருக்கு அருந்ததி போலவும், அவரது தெய்வீகத் தவ வாழ்க்கைக்கு ஏற்ற தேவியாகத் திகழ்கிறார். இத் திருமணத்தின் மூலம் ஸ்வாமிகளுக்கு ரேணுகா என்ற புதல்வியும் ரவிகுமாரன் என்ற புத்திரனும் உள்ளனர்.

ஸ்வாமிகள், பூனாவில் அரசாங்க ஆயுதச் சாலையில் சிறிது காலம் பணியாற்றினார். அப்போது எல்லாம் தம் கடமையை உணர்ந்து, எல்லோரையும் போலவே இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தார். எனினும், அவருடைய உள்ளத்தில் ஊறியிருந்த ஆன்மிக வேட்கை அவரை இருக்க விடவில்லை.

சுற்றித் திரியும் பைத்தியம் பற்றிக் கொண்டது. மலேசியா, இலங்கை முதலிய நாடுகளில் அலைந்து திரும்பினார். திரும்பியதும் வார்தா சென்று, மகாத்மா காந்தி அடிகளுடன் சில மாதங்கள் தங்கினார். வடக்கே இமயமலை வரையில் சென்றார்.

அங்கு லக்ஷ்மன்ஜுலாவில் ஓர் அதிசய மகானைச் சந்தித்தார். அவரைக் கண்ட உடனே ஸ்வாமிகளுக்கு அவரிடம் அபார பக்தியும் மதிப்பும் ஏற்பட்டது. அந்தப் பெரியவர் ஸ்வாமிகளை நோக்கித் தன்னுடைய முதுகில் காலால் எட்டி உதைக்கும்படி சொன்னார். அதன் மூலம் தன்னுடைய முதுகு வலி தீர்ந்துவிடும் என்று சொன்னார். இந்த விசித்திர ஆணையைக் கேட்டு தயங்கிய ஸ்வாமிகள், மீண்டும் அவர் வற்புறுத்தவே பெரியவரின் முதுகில் ஓங்கி உதைத்தார். அடியின் வேகத்தால் தாக்குண்ட பெரியவர் கரையிலிருந்து தவறி ஆற்றுக்குள் விழுந்துவிட்டார். ஆனால் முதுகு வலி நீங்கப் பெற்று மீண்டும் கரை சேர்ந்து ஸ்வாமிகளை வாழ்த்தினார். அந்த மகான்தான் ஸ்வாமிகளின் குருவானார்.

வடஇந்தியாவிலிருந்து ஊர் திரும்பிய ஸ்வாமிகளுக்கு நண்பர்களும் சீடர்களும் சூழ்ந்தனர். அவரிடம் அன்பு பூண்ட நண்பர் ஒருவர் ரகுநாதன் என்று பெயர். கள்ளர் குலத்தைச் சேர்ந்த அவருக்கு ஸ்வாமிகளிடம் அளவு கடந்த ஈடுபாடு. அதனால் அந்த அன்பர் தம்முடைய சொத்து பூராவையும் ஸ்வாமிகளின் பெயருக்கு எழுதி வைத்தார். ஆனால் அந்த அன்பர் இறந்ததும் ஸ்வாமிகள் அந்த சொத்தை எல்லாம் அவர் குடும்பத்தினருக்கே மாற்றி விட்டார். மதிப்பற்ற மெய்ஞான செல்வத்தைப் பெற்ற அவருக்கு பொய்யான இந்த உலகத்துச் செல்வம் எதற்கு?

உலக மக்களோடு ஒன்றாய்ப் பழகினாலும், அவர் உலக வாழ்க்கையில் ஒட்டாத பற்று அற்ற ஞானச் செல்வர். அவருடைய உண்மை நிலையை உணர்ந்த அவருடைய குடும்பத்தினர் அவரை தெய்வமாக எண்ணி வழிபடுகின்றனர். அவருடைய வாழ்க்கையே வேதாந்த தத்துவத்தின் பேருண்மையை எடுத்துக் காட்டும் இலக்கியமாய் விளங்குகிறது.

அவரைப் பார்த்தோர் யாரும் சாதாரணமாக அவருடைய மேன்மையை உணர மாட்டார்கள். மிகவும் எளிய சுபாவம்; இனிய பேச்சு; புன்முறுவல் தவழும் முகம். ஆனால் அவருடைய பெரியவட்ட விழிகள் – உள்ளத்தின் பேரொளியை எடுத்துக்காட்டுவது போல், சுடர் விட்டுப் பிரகாசிக்கும்; ஒரு சமயம், குறும்பு தெறிக்க உருண்டு சலிக்கும்; மறு சமயம் எதிர் நோக்க இயலாதபடி உறுத்து விழிக்கும். மறுகணம் அலை ஓய்ந்த ஆழ்கடலைப் போல் அமைதியே உருவாகக் காட்சி அளிக்கும். ஆனால் எப்போதும் அந்த விழிகளில் தேங்கியுள்ள கருணைப் பிரவாகத்தை வர்ணிக்கவே முடியாது.

கடவுளே மனித உருவில் வந்ததைப் போல் நம்மிடையே வந்து, தம்முடைய அளவற்ற கருணைத் திறத்தால் யாவருக்கும் அன்பு காட்டி, அருள் புரியும் ஆண்டவராய் விருப்பு வெறுப்பற்று விளையாடும் வேதாந்த மஹரிஷியாய் விளங்கும் பகவான் ஸ்ரீ காரைச் சித்தர் அவர்களை வணங்கி வழிபட்டு, அவரது அருளால், அவ்வருளின்படி நிற்போமாக.